திண்டுக்கல் அருகே ஒட்டன்சத்திரம் விருப்பாச்சியில் சுதந்திர போராட்ட வீரர் கோபால் நாயக்கருக்கு மணிமண்டபம் கட்டி நாயுடு நாயக்கர் சமுதாயத்தினருக்கு பெருமை சேர்த்தவர் முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக பேசியதோடு கோபால் நாயக்கரின் 223வது நினைவு நாள் விழாவில் கலந்து கொள்வதாக தமிழ்நாடு நாயுடுநாயக்கர் உறவின்முறை பாதுகாப்பு இயக்க நிர்வாகிகளிடம் உறுதியளித்தார்.

திருப்புவனம் மேற்கு கிழக்கு ஒன்றிய நகர தி.மு.க. சார்பில் திருப்புவனம் டி.ஆர்.திருமண மஹாலில் மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கைமாறன் தலைமையில் வசந்தி சேங்கைமாறன். எம்.ஏ கடம்பசாமி. பேரூர் கழக செயலாளர் நாகூர்கனி. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர், தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார். சிறப்புரையாற்றினார்கள் இந்நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் ஜெயமூர்த்தி. யூனியன் துணை சேர்மன் மூர்த்தி. பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லாகான். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பொற்கோ. மாவட்ட பிரதிநிதிகள் பிச்சைமணி.ராமலிங்கம். ஈஸ்வரன்.சுப்பையா. அக்கினி ராஜ். ஒன்றிய கழக நிர்வாகிகள். சுப்பிரமணியன். இளங்கோவன். மகேந்திரன். தினகரன். சக்திமுருகன். ஜெயசித்ரா நடராஜன். அன்னமுத்து இளங்கோவன். ராமு. மீனாட்சி சுந்தரம். மாவட்ட விவசாய நிர்வாகிகள் டி ஆர் சேகர். பூவந்தி மணிகண்டன். ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் தேவதாஸ்.அறிவுகரசு. நகர இளைஞரனி அமைப்பாளர் கண்ணன். ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர்கள் காளிதாஸ்.பாண்டிய கிருஷ்ணன் தேளி கோபால்.. மணிமுத்து. மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வைணவத் திருக்கோயில்களுக்கான - கட்டணமில்லா

ஆன்மிகப் பயணத்திற்கு - மூத்த குடிமக்கள் விண்ணப்பிக்கலாம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, ஆக. 31- புரட்டாசி மாதத்தில் வைணவத் திருக்கோ யில்களுக்கான கட்டணமில்லா ஆன்மிகப் பயணத்திற்கு மூத்த குடிமக்கள் விண்ணப் பிக்கலாம் என்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுத லின்படி, 2024-2025 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற் றிடும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் சென்னை, காஞ்சிபுரம், மயிலாடுதுறை, திருச்சி, மதுரை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மண் டலங்களில் அமைந்துள்ள முக்கிய வைணவத் திருக் கோயில்களுக்கு புரட்டாசி மாதத்தில் மேற்கொள்ளும் ஆன்மிகப் பயணத்தில் பங் கேற்க விரும்பும் மூத்த குடி மக்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் மக்கள் தெய்வ வழிபாட்டை தொன்று தொட்டுப் போற்றி வருகின்ற னர். பல்வேறு திருக்கோயில் களுக்கு ஒரே நாளில் சென்று வழிபடுவதை பெரும் விருப்பமாகக் கொண்டுள் ளனர். இதனைக் கருத்தில் கொண்டு, 2024 - 2025 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பில், “ஆடி மாதத் தில் பிரசித்தி பெற்ற அம் மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் பிர சித்தி பெற்ற வைணவத் திருக்கோயில்களுக்கும் இறை தரிசனம் கிடைக்க இயலாத 60 வயது முதல் 70 வயதிற்கு உட்பட்ட, தலா 1,000 பக்தர்கள் அழைத்து செல்லப்படுவர். இதற்கான செலவினத் தொகை ரூ.50 இலட்சம் அரசு நிதியாக வழங்கப்படும்” என

அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை நிறைவேற் றிடும் வகையில், சென்னை, காஞ்சிபுரம், மயிலாடுதுறை, திருச்சி, மதுரை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களில் அமைந் துள்ள முக்கிய வைணவத் திருக்கோயில்களுக்கு புரட் டாசி மாதத்தில் மேற் கொள்ளும் ஆன்மிகப் பய ணத்தில் 1,000 மூத்த குடிமக்கள் கட்டணமின்றி (உணவு உட்பட) அழைத் துச் செல்லப்பட உள்ளனர்.

புரட்டாசி மாத வைண வத் திருக்கோயி ல்களுக் கான ஆன்மிகப் பயணம் நான்கு கட்டங்களாக, அதா வது 21.09.2024, 28.09.2024, 05.10.2024, 12.10.2024 ஆகிய நாட்களில் அந்தந்த மண்டலங்களில் தொடங் கப்பட உள்ளன.

சென்னை மண்டலத்தில் திருவல்லிக்கேணி. பார்த்த சாரதி திருக்கோயில், பெசன்ட் நகர், அஷ்டலட் சுமி திருக்கோயில், திருவி டந்தை, நித்திய கல்யாண பெருமாள் திருக்கோயில், மகாபலிபுரம், ஸ்தல சயன பெருமாள் திருக்கோயில், திருநீர்மலை, நீர்வண்ண பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

காஞ்சிபுரம் மண்டலத் தில் காஞ்சிபுரம், தேவராஜ பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம், வைகுண்ட பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம், விளக்கொளி பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம், பாண்டவதூத பெருமாள் திருக்கோயில், ஸ்ரீபெரும்புதூர், ஆதிகேசவ பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

விழுப்புரம் மண்டலத்தில் விழுப்புரம், ஆஞ்சநேயர் சுவாமி திருக்கோயில், விழுப்புரம், வைகுண்ட பெருமாள் திருக்கோயில், கோலியனூர், வரதராஜ பெருமாள் திருக்கோயில், பூவரசங்குப்பம் லட்சுமி நர சிம்ம சுவாமி திருக்கோயில், பரிக்கல், லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

தஞ்சாவூர் மற்றும் மயி லாடுதுறை மண்டலங்களில் கும்பகோணம், சக்கரபாணி பெருமாள் திருக்கோயில், கும்பகோணம், சாரங்க பாணி பெருமாள் திருக்கோ யில், உப்பிலியப்பன்கோயில், வெங்கடாசலபதி திருக்கோ யில், நாச்சியார்கோயில், ஸ்ரீநிவாச பெருமாள் திருக் கோயில், திருச்சேறை, சார நாத பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

திருச்சி மண்டலத்தில் ஸ்ரீரங்கம், அரங்கநாத சுவாமி திருக்கோயில், உத்த மர்கோயில், புருஷோத்தம பெருமாள் திருக்கோயில், அன்பில், சுந்தராஜ பெரு மாள் திருக்கோயில், திரு வெள்ளறை. புண்டரீகாட்ச பெருமாள் திருக்கோயில், கோவிலடி, அப்பகுடத் தான் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

மதுரை மண்டலத்தில் அழகர்கோயில், கள்ளழகர் திருக்கோயில், ஒத்தக்கடை, யோக நரசிம்ம பெருமாள் திருக்கோயில், திருமோகூர், காளமேகப் பெருமாள் திருக்கோயில், திருக்கோஷ் டியூர், சௌமிய நாராய ணப் பெருமாள் திருக்கோ யில், மதுரை, கூடலழகர் பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மண்டலங்க ளில் பெருங்குளம், மாயக் கூத்தர் திருக்கோயில், இரட்டை திருப்பதி, அரவிந்தலோசனர் திருக் கோகோயில், கள்ளபிரான், தேவர்பிரான் திருக்கோயில், இரட்டை திருப்பதி திருக் கோயில், நத்தம், விஜயாசன பெருமாள் திருக்கோயில், திருப்புளியங்குடி, காய் சினி வேய்ந்த பெருமாள் திருக்கோயில், தென்திருப் பேரை, மகர நெடுங்கு ழைக்காதர் திருக்கோயில், ஆழ்வார் திருநகரி, ஆதிநாத ஆழ்வார் திருக்கோயில், திருக்கோளூர், வைத்தமா நிதி பெருமாள் திருக்கோயில், கள்ளபிரான், வைகுண்ட பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது.

மேலும், இது தொடர் பான விபரங்களுக்கு இந்து சமய அறநிலையத்துறையின் கட்டணமில்லா தொலை பேசி எண் 1800 425 1757, சென்னை மண்டலத்திற்கு 044-29520937, 9941720754, காஞ்சிபுரம் மண்டலத் திற்கு 044-29592380, விழுப் புரம் மண்டலத்திற்கு 04146-225262, மயிலாடு துறை மண்டலத்திற்கு 04364-299258, 8807756474, தஞ்சாவூர் மண்டலத்திற்கு 04362-238114, திருச்சி மண் டலத்திற்கு 0431-2232334, மதுரை மண்டலத்திற்கு 0452-2346445, தூத்துக்குடி மண்டலத்திற்கு 0461-2341144, திருநெல்வேலி மண்டலத்திற்கு 0462-2572783 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம். ஆகவே, புரட்டாசி மாதத் தில் வைணவத் திருக்கோயில் களுக்கு ஆன்மிகப் பயணம் செல்ல விரும்பும் மூத்த குடி மக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு இறை தரிசனம் பெறலாம் என இந்து சமய அறநிலை யத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித் துள்ளார்.

மோடி தலைமையிலான

ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் - நீதியை எதிர்பார்ப்பதுகூட குற்றமே!

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி விமர்சனம்!

புதுடெல்லி, ஆக 31- மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க., ஆட்சியில் நீதியை எதிர்பார்ப்பது கூட குற்றம் தான் என்று மக்களவை எதிர்க் கட்சி தலைவர் ராகுல்காந்தி விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூகவலை தளப் பதிவில்,

மோடி ஆட்சியில் எந்த நல்ல தைத்தான் எதிர்பார்க்க முடியும் என்று வினவியுள்ளார். பலவீன மானவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட வர்களுக்கும் எதிரான மிக கடுமை யான சம்பவங்களில் கூட குற்றங் களை மறைக்கும் முயற்சிகள்தான்

நடைபெற்று வருகின்றன என்று அவர் சாடியுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் ஃபரூக்காபாத்தில் இரு சிறுமிகள் மர்மமான முறையில் உயிரிழந்த விவகாரம் மிகவும் துரதிருஷ்ட வசமானது என்று அவர் தெரிவித் துள்ளார்.

பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு நீதி வழங்காமல், அவர்களை மேலும் புண்படுத்துவது பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்று என்று ராகுல்காந்தி குறிப்பிட்டுள்ளார்.

இன்னும் எவ்வளவு காலத்துக் குதான் மோடி ஆட்சியின் அவலங் களை பொறுத்துக் கொள்ள முடியும் என்று அவர் சாடியுள்ளார்.

இது நம் சமூகம் முன்பு நிற்கும் முதல் கேள்வி என்று ராகுல் தெரி வித்துள்ளார். பாதுகாப்பு என்பது இந்திய பெண்கள் ஒவ்வொருவ ரின் உரிமை என்று தெரிவித் துள்ள அவர், நீதி என்பதும் துன்பப் படும் ஒவ்வொரு குடும்பத்தின் உரிமை என்று பதிவிட்டுள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில், 6 பள்ளிகளைச் சார்ந்த

562 மாணவர்களுக்கு ரூ.27.01 இலட்சத்தில் விலையில்லா மிதிவண்டிகள்!

அமைச்சர் கா. ராமச்சந்திரன் வழங்கினார்!

நீலகிரி, ஆக.31- நீலகிரி மாவட்டம், குன் னூர் புனித மரியன்னை பெண்கள் மேல்நிலைப்பள் ளியில், நேற்று முன்தினம் (29.08.2024) பள்ளிகல்வித் துறையின் சார்பில், நடை பெற்ற நிகழ்ச்சியில், சுற்று லாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் குன்னூர் புனித மரியன்னை பெண் கள் மேல்நிலைப்பள்ளி யைச் சேர்ந்த 190 மாணவி யர்களுக்கும், உபதலை அரசு மேல்நிலைப்பள்ளி யைச் சேர்ந்த 65 மாணாக் கர்களுக்கும், குன்னூர் அறி ஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த 27 மாணாக்கர்க ளுக்கும், அருவங்காடு புனித அன்னாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த 101 மாணவியர்க ளுக்கும், குன்னூர் ஸ்ரீசாந்தி விஜய் பெண்கள் மேல்நி லைப்பள்ளியைச் சேர்ந்த 32 மாணவியர்களுக்கும், குன் னூர் புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த 147 மாணாக்கர்க ளுக்கும் என மொத்தம் 6 பள்ளிகளைச் சார்ந்த 562 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.27.01 இலட்சம் மதிப்பீட் டிலான விலையில்லா மிதி வண்டிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில், சுற்று லாத்துறை அமைச்சர் க.ராமச்சந்திரன் தெரிவித்த தாவது தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் ஆட் சிப்பொறுப்பேற்றது முதல் பல்வேறு நலத்திட்டங்க ளையும், வளர்ச்சித்திட்டப் பணிகளையும் அறிவித்து, அதனை சிறப்பாக செயல்ப டுத்தி வருகிறார்கள். ஒரு சராசரி மனிதனின் அடிப் படை தேவையான உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இருப்பிடம் முக்கிய மானது. அதுமட்டுமல்லாமல் மருத்துவம் மற்றும் கல்வி ஆகியவை அனைவருக்கும் சென்று சேர்க்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு திட்டங்கள் தமிழ் நாடு அரசால் செயல்படுத் தப்பட்டு வருகிறது.

மேலும், நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத் தியாசிய உணவுப்பொருட் களும், இலவச வேட்டி சேலைகளும், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரி யத்தின் சார்பில் குடி யிருப் புகளும், தற்போது கலை ஞர் கனவு இல்லத்தின் கீழ் வீடுகளும் வழங்கப்பட்டு வருகிறது. நமது மாவட்டத் தில் கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையானது 3வது ஆண்டில் மருத்துவ மாணவர்களுடன் அடியெ டுத்து வைத்துள்ளது. குறிப் பட்ட கட்டுமான பணிகள் விரைவில் முடிவடைந்து பொதுமக்களின் பயன்பாட் டிற்கு திறந்து வைக்கப்பட வுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில், குக்கிராமங்களில் நோயாள் பாதிக்கப்படும் பொதுமக் கள் நகரத்திலுள்ள மருத்து வமனைகளுக்கு வரும் சிர மத்தை போக்குவதற்காக அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதுமான மருத்துவர்களை நியமித்து, மருத்துவ சேவை வழங்கப் பட்டு வருகிறது.

மேலும், கல்வித் துறையை பொறுத்தவரை புதுமைப் பெண்திட்டம், தமிழ் புதல்வன் திட்டங்கள் மூலம் மாணவ, மாணவியர் களின் வங்கிக்கணக்கில் மாதந்தோறும் தலா ரூ.1,000 வழங்குவதன் மூலம் உயர்கல்வி பயில் வதை அரசு உறுதி செய் துள்ளது.

மேலும், இல்லம் தேடிக் கல்வி எனும் சிறப்புத்திட் டம் செயல்படுத்தும் வித மாக தன்னார்வலர்கள் மூலம் ஒவ்வொரு கிராமத்தி லும் குழந்தைகளுக்கு கல்வி கற்றுக்கொடுத்து அவர்க ளின் கல்வி ஆற்றலை மேம் படுத்துவது, நான் முதல்வன் திட்டம் மூலமாக பள்ளிக் கல்வி முடித்து, உயர்கல்வி செல்லும் மாணவ, மாணவி யர்களுக்கு வழிகாட்டி ஏற் படுத்தி, அவர்களுக்கு நல் வழி காட்டுவது, பேராசிரி யர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத்திட்டத்தின் மூலம் பள்ளிகளின் உட்கட் டமைப்பு வசதிகள் மேம்ப டுத்துவது, காலை உணவுத் திட்டத்தின் மூலம் பள்ளிக்கு வரும் குழந்தை கள் பசியின்றி கல்வி கற் பதை உறுதி செய்வது போன்ற சிறப்பு வாய்ந்த திட்டங்கள் அரசால் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் விலையில்லா மிதி வண்டிகள் வழங்கும் திட் டத்தின்கீழ், 2021-2022ம் கல்வியாண்டில் 5,410 மாணவ, மாணவியர்க ளுக்கு ரூ.2.75 கோடி மதிப் பீட்டிலும், 2022-2023ம் கல் வியாண்டில் 4,074 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1.96 கோடி மதிப்பீட்டிலும், 2023-2024ம் கல்வியாண் டில் 4,087 மாணவ, மாண வியர்களுக்கு ரூ.1.97 கோடி மதிப்பீட்டிலும் வழங்கப் பட்டுள்ளது.

மேலும், 2024-2025ம் கல் வியாண்டில் 4,040 மாணவ, மாணவியர்களுக்கு

ரூ.1.94 கோடி மதிப்பீட் டில் விலையில்லா மிதிவண் டிகள் வழங்கப்படுகிறது. அதோடு மட்டுமல்லாமல், பள்ளிகல்வித்துறையின் மூலம் மாணவ, மாணவியர் கள் நலன் காக்க, கல்வி மேம்படுத்த அரசு வழங்கும் பல்வேறு நலத்திட்டங் களை பயன்படுத்தி, மாணவ, மாணவியர்கள் முழுமையாக பயன்படுத் திக் கொண்டு நன்றாக கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித் துள்ளார்.

முன்னதாக, சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச் சந்திரன், எடப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட இந்தி ராநகரில், அண்ணா கிராம மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ், ரூ.10.95 இலட்சம் மதிப்பீட் டில் கட்டப்பட்ட விவசாய பொருட்கள் சேமிப்பு கிடங்கினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கும் வகையில், குத்து விளக்கேற்றிவைத்து, பார் வையிட்டு,

குன்னூர் புனித மரி யன்னை பெண்கள் மேல்நி லைப்பள்ளியில் நடை பெற்ற நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் மாவட் டத்திலுள்ள தொலைதூர கிராமங்களில் உள்ள கால்ந டைகளுக்கு அதனுடைய இருப்பிடத்திற்கு சென்று சிகிச்சை அளிக்க மற்றும் செயற்கை முறை கருவூட் டல் பணி, தடுப்பூசி பணி கள் மற்றும் குடற்புழு நீக் கும் பணி போன்ற அத்தி யாவசிய சேவைகளை வழங்கிட நடமாடும் கால் நடை மருத்துவ வாகனத்தை வழங்கும் பொருட்டு, அதன் சாவி யினை கால்நடை பராமரிப் புத்துறை ஓட்டுநரிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், குன் னூர் வருவாய் கோட்டாட் சியர் சதீஷ், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.கீதா, குன்னூர் நகர மன்றத்துணைத்தலைவர் வசீம்ராஜா, பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறு பான்மையின நல அலுவலர் சுரேஷ்கண்ணன், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்தலை வர் திருமதி.சுனிதாநேரு, திட்டக்குழு உறுப்பினர் திரு.ராமசாமி, குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவ லர்கள் சந்திரசேகர், சுப்ர மணி, எடப்பள்ளி ஊராட் சித்தலைவர் முருகன், புனித மரியன்னை மகளிர் மேல்நிலைப்பள்ளி தலை மையாசிரியர் மார்கிரேட் ஆரோக்கியமேரி, நகரமன்ற உறுப்பினர் திருமதி.உமா வினோத் உட்பட அரசுத் துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தேசிய கல்விக் கொள்கையை ஏற்க மறுத்ததால்

நிதியை நிறுத்தி நிர்ப்பந்திப்பதா?

‘தீக்கதிர்’ தலையங்கத்தில் கேள்வி!

சென்னை, ஆக.31 தமிழ்நாடு தேசியக் கல்விக் கொள்கையை ஏற்க மறுத்த தால் நிதியை நிறுத்தி நிர்ப் பந்திப்பதா? என்று தீக்கதிர் தலையங்கத்தில் ஒன்றிய அர சுக்கு கேள்வி எழுப்பியுள்ளது.

இது குறித்த தலையங்கம் வருமாறு:-

தேசிய கல்விக்கொள் கையை ஏற்க மறுத்தால் கல்விக் கான நிதியை நிறுத்துவோம் என தமிழ கத்தை ஒன்றிய அரசு மறைமுகமாக நிர்ப் பந் திப்பது கடும் கண்டனத்திற்கு உரியது.

ஒருங்கிணைந்த கல்வித் திட் டத்தின் (சமர்க் கார சிக்ச அபி யான்) கீழ் 2024-25 ஆம் ஆண் டிற்குத் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய முதல் கட்ட நிதி ரூ.573 கோடியை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்தி ருக்கிறது. இத் திட்டத்தின் முதன்மை நோக்கமே அடிப்படைக் கல்வி தேவையை உறுதிப்படுத்து வதே ஆகும். அதற்கான திட் டத்தை ஒவ்வொரு ஆண்டும் மாநில அரசுகள் சமர்ப்பிக்கும்

தீக்கதிர்
2024 ஆகஸ்ட் 29 வியாழக்கிழமை
நிதியை நிறுத்தி நிர்ப்பந்திப்பதா?
தேசிய கல்விக்கொள்கையை ஏற்க மறுத்தால் கல்விக்கான நிதியை நிறுத்துவோம் என தமிழ கத்தை ஒன்றிய அரசு மறைமுகமாக நிர்ப் பந்திப்பது கடும் கண்டனத்திற்கு உரியது
ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் (சமர்க் கார சிக்ச அபியான்) கீழ் 2024-25 ஆம் ஆண்டிற்குத் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய முதல் கட்ட நிதி ரூ.573 கோடியை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்தி ருக்கிறது இத் திட்டத்தின் முதன்மை நோக்கமே அடிப்படைக் கல்வி தேவையை உறுதிப்படுத்து வதே ஆகும். அதற்கான திட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் மாநில அரசுகள் சமர்ப்பிக்கும் போது அதனை ஒன்றிய அரசின் ரைசிங் இந்தியா திட்டத்தின் கீழ் உள்ள திட்ட ஒப்புதல் வாரியம் ஒப்பு தல் அளிக்கும். அதன்படி 2024- 25 ஆம் ஆண்டிற்கு

போது அதனை ஒன்றிய அரசின் ரைசிங் இந்தியா திட் டத்தின் கீழ் உள்ள திட்ட ஒப்புதல் வாரியம் ஒப்பு தல் அளிக்கும். அதன்படி 2024- 25 ஆம் ஆண் டிற்கு தமிழகத்திற்கு ரூ 3,586 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதில் ஒன்றிய அரசின் பங் களிப்பான ரூ. 2,152 கோடி யில், முதல் தவணையாக ரூ. 573 கோடியை ஜூன் மாத்தி லேயே விடுவித்திருக்க வேண் டும். ஆனால் ஒன்றிய அரசு விடுவிக்கவில்லை. மாறாக பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் திட்ட த் தில் சேர புரிந்து ணர்வு ஒப்பந் தத்தில் கையெழுத்திட்டால் மட்டுமே நிதி ஒதுக்கப்படும் என நிர்ப்பந்திக்கப்படுகிறது. பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் திட்டத்தின் படி புதிய தேசிய கல்விக் கொள்கையை அமல்ப டுத்தினால் உடனே விடுவிக்கப் படும் என முன்நிபந்தனை விதிப்பது எந்த வகையிலும் ஏற் புடையதல்ல. இதே போல் கடந்த 2023- 24 ஆம் நிதியாண் டிற்கான ரூ. 249 கோடியையும் இதுவரை விடுவிக்கவில்லை. இது ஒன்றிய அரசின் ஜனநா யக விரோத மற்றும் அப்பட்ட மான எதேச்சதிகார நடவடிக் கையாகும்.

தேசியக் கல்விக் கொள்கை 2020 கால அட்ட வணைப்படி 2030க்குள் தற்போது உள்ள நிர் வாக மற்றும் கல்வியியல் கட்ட மைப்பை முழுமையாக மாற்றி யமைப்பதாகும். அதற்காக மாநில அரசு களை பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாக்கி; படிப்படியாகத் தேசியக் கல் விக் கொள்கையை நடைமு றைப்படுத்த அனைத்து முயற் சிகளையும் ஒன்றிய அரசு மேற்கொண்டு வருகிறது. இதன் முதன்மை நோக்கம் மாநில அரசுகளால் சமூகநீதி யின் அடிப்படையில் உருவான கல்விக் கட்டமைப் பைச் சிதைப்பதே ஆகும்.

இதன் ஆபத்துக்களை உணர்ந்தே இத்திட்டத் தில் தில்லி, பஞ்சாப், மேற்கு வங் கம், தமிழகம், கேரளா உள் ளிட்ட மாநிலங்கள் இதுவரை இணை யவில்லை. ஏற்கனவே தமிழகம் பிஎம் ஸ்ரீ திட்டத் தில் சேர மும்மொழிக் கொள்கையி லிருந்து விலக்கு உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்தது. அதைக் கூட ஒன்றிய அரசு ஏற்க மறுத்துவிட்டது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி கல்வி பொதுப் பட்டியலில் இருக்கிறது. இதில் மாநில அரசுகளின் உரிமைக ளும் உறுதிப் படுத்தப்பட்டுள் ளன. ஆனால் ஒன்றிய அரசு மாநிலங்களின் உரிமையை அடியோடு பறித்து ஒட்டு மொத்த கல்வியையும் காவிம யமாக்கத் துடிக்கிறது. இதனை ஒரு போதும் தமிழகம் ஏற் காது.

இவ்வாறு அதில் குறிப்பி டப்பட்டுள்ளது.